### தங்கம் விலை இன்று அதிரடி சரிவு:

# பவுன் ரூ.69,000–க்கு கீழ் வந்தது!

சென்னை, மே.15–

தங்கம் விலையில் இன்று ரூ.1,560 குறைந்தது. இதன் மூலம் ஒரு பவுன் ரூ.69,000–க்கு கீழ் இறங்கியுள்ளது.

தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வந்தது. ஒரு சில நாட்கள் மட்டும் சரிவை சந்தித்தது. இந்த ஆண்டு பிறந்த பிறகு மிக அதிக அளவில் ஏறியது. ஏப்ரல் மாதத்தில் ஒரு பவுன் ரூ.74 ஆயிரத்தையும் கடந்து சென்றது.

அதன் பிறகு ஏற்ற இறக்கத்தை சந்தித்தது. அந்த வகையில் கடந்த 12–ஆம் தேதி விலை 'மள மள'வென சரிந்து, நேற்று முன்தினம் விலை உயர்ந்து இருந்தது. இந்த நிலையில் நேற்று அதன் விலை மீண்டும் குறைந்து காணப்பட்டது. நேற்று முன்தினம் ஒரு கிராம் ரூ.8 ஆயிரத்து 855க்கும், ஒரு பவுன் ரூ.70 ஆயிரத்து 840க்கும் விற்பனை ஆனது.

நேற்று மாலை நேர நிலவரப்படி, கிராமுக்கு ரூ.50ம், பவுனுக்கு ரூ.400ம் குறைந்து, ஒரு கிராம் ரூ.8 ஆயிரத்து 805க்கும், ஒரு பவுன் ரூ.70 ஆயிரத்து 440க்கும் விற்பனை செய்யப்பட்டது. வெள்ளி விலையை பொறுத்தவரையில், நேற்று எந்த மாற்றமும் இல்லாமல், ஒரு கிராம் ரூ.109க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 9 ஆயிரத்துக்கும் விற்பனை ஆனது. இந்த நிலையில், இன்று ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,560 குறைந்து ரூ.68,880க்கு விற்பனை ஆகிறது. ஆபரணத்தங்கத்தின் விலை கிராம் ரூ.195 குறைந்து ரூ.8,610க்கு விற்பனை செய்யப்படுகிறது. 3 வாரங்களில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.5,000 வரை உயர்ந்த நிலையில் தற்போது தங்கம் விலை இறங்குமுகம் நோக்கி செல்கிறது. அதைப்போல வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.1 குறைந்து ரூ.108–ஆக விற்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், நான் முதல்வன் திட்டத்தின் கீழ், "கல்லூரிக் கனவு 2025" நிகழ்ச்சியை கலெக்டர் தினேஷ் குமார் துவக்கி வைத்து, உரையாற்றினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) முனிராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## ஊட்டியில் 127–வது...

1–ம் பக்கத் தொடர்ச்சி...

செஸ், யானை உள்பட பல்வேறு அலங்காரங்கள் செய்யப்பட்டு உள்ளன. நுழைவுவாயில் 1.70 லட்சம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு கண்ணாடி மாளிகை, கள்ளிச்செடி மாளிகை புதுப்பிக்கப்பட்டு, அங்கும் அரியவகை தாவரங்கள் மற்றும் மலர் செடிகள் காட்சிக்கு வைக்கப்பட்டு உள்ளது. மேலும் சுற்றுலா பயணிகள், குழந்தைகளை கவரும் வகையில் தாவரவியல் பூங்கா முழுவதும் வண்ண விளக்குகள் மற்றும் தோரணங்களால் அழகுப்படுத்தப்பட்டுள்ளது. வழக்கமாக 5 நாட்கள் நடைபெறும் மலர் கண்காட்சி, இந்த ஆண்டு 11 நாட்கள் நடப்பதால் பூந்தொட்டிகள் மற்றும் மலர் செடிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக அரங்கம் மற்றும் பல்வேறு அரங்குகள் அமைக்கப்பட்டு உள்ளது. மலர் கண்காட்சியை யொட்டி நீலகிரி மாவட்டத்திற்கு இன்று (வியாழக்கிழமை) உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது. சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதால், 200 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்நாடுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 5 நாட்கள் அரசு முறை பயணமாக கடந்த 12–ந் தேதி ஊட்டி வந்தார். இங்கு பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் நாளை 16–ந் தேதி சென்னை திரும்புகிறார்.

### பெசன்ட் நகர் கடற்கரையில் நடக்கிறது:

# தமிழீழ இனப்படுகொலைக்கு மே 18–ல் நினைவு அஞ்சலி!

## வைகோ அழைப்பு!!

சென்னை, மே. 15–

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

உலக வரலாற்றில், உலகின் பல இடங்களில் நடைபெற்ற இனப்படுகொலைகளில் 2009 ஆம் ஆண்டில் இலங்கைத் தீவில் சிங்கள பேரினவாத அரசு உலக வல்லரசு நாடுகளிடம் சக்தி வாய்ந்த ஆயுதங்களை வாங்கிக் கொண்டு முப்படைகளை யும் ஏவி கோரமான தமிழீழ இனப்படுகொலை நடத்தியது. அதில் தமிழர்களுக்கும், தமிழ்ப் பெண்களுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகளை நினைக்கும்போ தே நமது நெஞ்சம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறது.தற்போது தமிழர் தாயகத்தில் 90 ஆயிரம் இளம் விதவைகள் இருக்கிறார்கள். ஐ.நா. சபை தலைவராக இருந்த பான் கி மூன், இலங்கைத் தீவில் நடைபெற்ற படுகொலைகளைப் பற்றிய ஆராய மார்சுகி தாரீஸ்மென் தலைமையில் ஒரு குழுவை ஐ.நா. சார்பில் அனுப்பினார். அந்தக் குழுவினர் தங்களது அறிக்கையில், ஒரு இலட்சத்து 37 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரமாயிரம் இளம் பெண்கள், தாய்மார்கள் பாலியல் கொடுமைகளால் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்துள்ளனர். யுத்தத்தின் நிலவரம் இப்படி இருக்க, தமிழகத்தில் 2009 ஜனவரி 29 ஆம் தேதி அன்று சென்னை கொளத்தூரில் வசித்து வந்த முத்துக்குமார், மத்திய வருமானவரித் துறை அலுவலத்திற்கு முன்பு தலை முதல் கால் வரை பெட்ரோலை ஊற்றி நெருப்பை படற வைத்து, தமிழக இளைஞர்களும், மாணவர்களும் ஈழத்தமிழர்களைக் காக்க வேண்டும். தீக்குளித்து கருகிப்போன என் உடலை அதற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்ற மரண சாசனத்தை தன் அருகிலேயே போட்டு விட்டு, தீயின் தணலுக்கு இரையானான். வரிசையாக 19 தமிழர்கள் தீக்குளித்து மடிந்தனர். தமிழ் உணர்வாளர்களும், ஈழத் தமிழ் பற்றாளர்களும், மறுமலர்ச்சி தி.மு.க. கண்மணிகளும் 18 ஆம் தேதி மாலை 4 மணிக்கெல்லாம் பெசன்ட் நகர் கடற்கரைக்கு வருவதற்கும், கட்சி சார்பற்ற ஈழத் தமிழ் உணர்வாளர்கள் பெருமளவில் அதில் பங்கேற்க வேண்டும் என்றும் நான் இருகரம் கூப்பி வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

சி.பி.எஸ்.சி. 10ஆம் வகுப்பு மற்றும் பிளஸ் டூ பொதுத் தேர்வில் சாதனை படைத்த தர்மபுரி அதியமான் கோட்டை செந்தில் பப்ளிக் பள்ளி மாணவ மாணவிகளை செந்தில் கல்வி குழுமங்களின் தலைவர் கந்தசாமி, துணைத்தலைவர் மணிமேகலை கந்தசாமி, செயலாளர் தனசேகர் ஆகியோர் வாழ்த்தி பாராட்டினார்கள்.

### கர்னல் சோபியா குரேஷி குறித்து சர்ச்சை கருத்து:

# பா.ஜ.க. அமைச்சர் மீது வழக்கு

## பதிய உயர்நீதிமன்றம் உத்தரவு!

ஜபல்பூர், மே.15–

கர்னல் சோபியா குரேஷி குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்த மத்திய பிரதேச மாநில அமைச்சர் விஜய் ஷா மீது முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) பதிவு செய்ய அந்த மாநில உயர்நீதிமன்றம் புதன் கிழமை உத்தரவிட்டது.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடியாக, பாகிஸ்தானில் அமைந்திருந்த பயங்கரவாதிகள் முகாம்கள் மீது 'ஆபரேஷன் சிந்தூர் நட வடிக்கையை இந்தியா மேற்கொண்டது. அதைத் தொடர்ந்து, ஆளில்லா விமானங்கள், ஏவுகணைகளை வீசி இந்தியா மீது பாகிஸ்தான் தாக்குதல் முயற்சி மேற்கொண்டது. இந்தியா தனது வான் பாதுகாப்பு அமைப்பு மூலம் பாகிஸ்தானின் முயற்சிகளை வெற்றிகரமாக முறியடித்தது.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பான அதிகாரபூர்வ விவரங்களை தில்லியில் நடைபெற்ற தொடர் பத்திரிகையாளர் சந்திப்புகளில் கடற் படை கமடோர் ரகு நாயர், விங் கமாண்டர் வியோமிகா சிங் மற்றும் கர்னல் சோஃபியா குரேஷி ஆகியோர் இணைந்து வெளியிட்டு வந் தனர். தாக்குதல் தொடர்பான விவரங்களை இரு பெண் அதிகாரிகளைக் கொண்டு வெளியிட் டதை பலரும் பாராட்டினர். இந்த நிலையில், கர் னல் சோஃபியா குரேஷி குறித்து மத்திய பிரதேச மாநில பாஜக அமைச்சர் விஜய் ஷா தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையானது.

அதாவது, 'பஹல்காமில் நமது சகோதரிகளின் குங்குமத்தை அழித்தவர்களை, அவர்களின் சகோதரியை வைத்தே பிரதமர் மோடி ஒழித்துவிட் டார்' என்று விஜய் ஷா கூறியிருந்தார்.

கர்னல் சோஃபியா குரேஷி இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவரைத் தீவிரவாதிகளின் சகோதரி என சித்திரிக்கும் வகையில் அமைச் சர் பேசியதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சி கள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையான நிலை யில், 'எனது கருத்து யாரையும் புண்படுத்தியிருந் தால், பத்து முறை மன்னிப்பு கேட்கத் தயாராக உள்ளேன்' என்று விஜய் ஷா தெரிவித்தார்.

இந்த விவகாரத்தை தானாக முன்வந்து விசாரணைக்கு ஏற்ற மத்திய பிரதேச உயர் நீதிமன்ற நீதிபதிகள் அதுல் ஸ்ரீதரன், அனுராதா சுக்லா அமர்வு, 'மாநில அமைச்சர் விஜய் ஷா மீது காவல் துறை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அது குறித்த விவரத்தை நீதிமன்றத்தில் தெரியப்படுத்த வேண்டும்' என்று உத்தரவிட்டு விசாரணையை வியாழக்கிழமை (மே 15) காலை 10.30 மணிக்கு ஒத்திவைத்தனர்.

முக்தார் அப்பாஸ் நக்வி கண்டனம்: மத்திய பிரதேச பாஜக அமைச்சர் விஜய் ஷா கருத்துக்கு அக் கட்சியின் மூத்த தலைவர் முக்தார் அப்பாஸ் நக்வி புதன்கிழமை கண்டனம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக நக்வி வெளியிட்ட விடியோ பதிவில், மிகுந்த உற்சாகத்தில் சுயகட்டுப்பாட்டை இழப்பதை சிலர் வாடிக்கையாகக் கொண்டுள் ளனர். அதுபோல, மத்திய பிரதேச அமைச்சர் விஜய் ஷா தெரிவித்த கருத்து கண்டனத்துக்குரி யது. அதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாடு முழு வதும் வெற்றிக் கொண்டாட்ட மனநிலையில் இருக்கும்போது, சிலர் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் பேசுவது ஏமாற்றமளிக்கிறது. இவர்கள் எப்போதும் கெடுக்கும் மனநிலையுடன் செயல்ப டுபவர்கள்' என்று குறிப்பிட்டார்.

## தேடுதல் குழுவுக்கு தமிழக...

1–ம் பக்கத் தொடர்ச்சி...

தல் குழுவை நியமித்துள்ளது.ஏற்கனவே தமிழ் நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் , அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ஆகிய 4 பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர் பதவி காலியாக உள்ளது.

இவற்றிற்கு துணை வேந்தர் தேடுதல் குழு ஏற்கனவே அமைக்கப்பட்டது. அதில் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு 2022 அக்டோபர் 19 – ஆம் தேதியும், அண்ணா மலைப் பல்கலைக்கழகத்திற்கு 2024 டிசம்பர் 9 – ஆம் தேதியும், அண்ணா பல்கலைக்கழகத்திற்கு 2024 டிசம்பர் 13–ஆம் தேதியும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு 2025 ஜனவரி10–ஆம் தேதியும், இக் குழுக்கள் அமைக்கப்பட்டன.ஆனால் கவர்னர் ஆர். என். ரவிக்கும், தமிழக அரசுக்கும் இடையே துணை வேந்தர் நியமனத்தில் மோதல் போக்கு இருந்தது. இந்த பல்கலைக் கழகங்களுக்கு நியமிக்கப்பட்ட தேடுதல் குழுவில் 3 பேர் இடம் பெற்றிருந்தனர்.

இவர்களுடன் பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரை செய்த 4 –ஆவது நபர் நியமனம் செய்வதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதன் காரணமாக துணை வேந்தர்கள் நியமிக்கப்படாமல் அப்பதவி பல வருடங்களாக காலியாக கிடக்கின்றது. இதனால் இங்கு சரிவர பணிகள் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. தற்போது உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பல்கலைக் கழகங்களின் வேந்தராக தமிழக முதலமைச்சர் உள்ளார். எனவே தற்போது மேற்கண்ட 4 பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர் நியமனம் செய்ய தலா 3 பேர் கொண்ட தேடுதல் குழுக்களை தமிழக அரசு நியமித்துள்ளது. அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் தேடுதல் குழுவில் அரியானாவில் உள்ள குரு ஷேத்ரா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் கைலாஷ் சந்திர சர்மா, முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி பி.டபி ள்யூ.சி டேவிதார், சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் ஜி. திருவாசகம் ஆகியோர் இடம் பெற்றனர்.அண்ணா மலை பல்கலைக் கழக துணை வேந்தர் தேடுதல் குழுவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர்கே.பிச்சுமணி,முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி கே. அலாவுதீன் மற்றும் சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் திருவாசகம் ஆகியோர் உள்ளனர்.மதுரை காமராஜர் பல்கலைக்கழக துணை வேந்தர் தேடுதல் குழுவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் கே. பிச்சுமணி , பேராசியர் கே. ஜோதி சிவஞானம், பேராசிரியர் கே. ஏ. மணிக்குமார் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக துணை வேந்தர் தேடுதல் குழுவில் பல்கலைக்கழக மானியக் குழுவைச் சேர்ந்த பேராசிரியர் சுஷ்மா யாதவா, மன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி அலாவுதீன், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டி.பத்மநாபன் ஆகியோர் உள்ளனர். இந்த துணை வேந்தர் தேடுதல் குழு தனது அறிக்கையை தாக்கல் செய்ய வருகிற ஆகஸ்டு 13–ஆம் தேதி வரை கால அவகாசத்தை நீட்டித்துள்ளது. மேலும் இந்த அறிக்கையை இனி கவர்னரிடம் (ஆர்.என்.ரவியிடம்) தாக்கல் செய்ய வேண்டாம். இந்த அறிக்கையை தமிழக அரசிடம் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

# டாஸ்மாக் முறைகேடு வழக்குகளை சி.பி.ஐ.க்கு மாற்றக்கோரி மனு!

## மத்திய, மாநில அரசுகளுக்கு நோட்டீஸ்!!

சென்னை,மே.15–

டாஸ்மாக்கில் ரூ.1000 கோடி ரூபாய் முறைகேடு தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளை சிபிஐக்கு மாற்றக் கோரிய வழக்கில், மத்திய மாநில அரசுகள், சிபிஐ, அமலாக்கத் துறை மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், பாளையங்கோட்டையைச் சேர்ந்த வழக்கறிஞர் வெங்கடாசலபதி என்பவர் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில், தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளில் மதுபானங்களை அதிகவிலைக்கு விற்பனை செய்தது, பார் உரிமம் வழங்கியது உள்ளிட்டவற்றில் ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளதாக புகார் கூறப்பட்டது.

இதுதொடர்பாக, கடந்த 2017 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் லஞ்ச ஒழிப்புத் துறை பதிவு செய்த வழக்குகளின் அடிப்படையில் அமலாக்கத் துறையினர், சட்ட விரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து, டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த மார்ச் மாதம் சோதனை நடத்தினர்.

இந்நிலையில், இந்த முறைகேடுகள் தொடர்பாக டாஸ்மாக் மற்றும் அதன் அதிகாரிகளுக்கு எதிராக லஞ்ச ஒழிப்புத் துறை பதிவு செய்துள்ள வழக்குகளை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும். அமலாக்கத் துறை விசாரணையை முடக்கும் நோக்கில் மாநில அரசு செயல்படுகிறது. ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு வழக்கை நியாயமாகவும், எந்த இடையூறும் இன்றி விசாரிக்க வேண்டும் என்பதால் சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும். டாஸ்மாக் அதிகாரிகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளை விசாரிக்க மாநில அரசுக்கு தடை விதிக்க வேண்டும் என்று மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன் மற்றும் வி.லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த மனுவுக்கு மத்திய, மாநில அரசுகள், சிபிஐ, அமலாக்கத் துறை, டாஸ்மாக் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளி வைத்தனர்.

# செல்லூர் ராஜூ மன்னிப்பு கேட்க வேண்டும்!

## முன்னாள் ராணுவத்தினர் லீக் வலியுறுத்தல்!!

மதுரை,மே.15–

ராணுவத்தினருக்கு எதிராக பேசிய முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ மன்னிப்பு கேட்காவிட்டால் அவருக்கு தேர்தலில் ஆதரவளிக்க மாட்டோம் என்று தமிழ்நாடு முன்னாள் ராணுவத்தினர் லீக் தலைவர் முன்னாள் கர்னல் சி.டி. அரசு தெரிவித்தார்.

இது தொடர்பாக மதுரையில் அவர் கூறியதாவது:

காஷ்மீரில் பஹல்காமில் நடந்த தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து, நமது ராணுவம் ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பதில் நடவடிக்கையில் ஈடுபட்டது. இதில் தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன. மீண்டும் பாகிஸ்தான் சீண்டினால்கடுமையான பதிலடி தரப்படும்.

முன்னாள் படை வீரர்களாகிய நாங்கள் முப்படைகளுக்கும் தேவையா ன உதவிகளை செய்ய தயார் நிலையில் உள்ளோம் என உறுதி அளித்துள்ளோம்.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு, 'நமது ராணுவ வீரர்கள் சண்டை போட்டார்களா?" என்பது போன்ற சில விரும்பத்தகாத கருத்துகளை தெரிவித்திருப்பதை கண்டிக்கிறோம். அவரின் இக்கருத்து படை வீரர்களுக்கு வேதனையை ஏற்படுத்தியுள்ளது. அவர், தனது கருத்தை திரும்பப் பெறுவதுடன் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இல்லையெனில், தேர்தலில் அவரை ஆதரிக்க மாட்டோம் என்று கூறினார்.

### பெரியகுளம் அருகே

# அரசு பஸ் மோதி 15 மாடுகள் பலி!

## மேய்ச்சலுக்கு சென்றபோது பரிதாபம்!!

பெரியகுளம்,மே.15–

பெரியகுளம் அருகே அரசு பேருந்து மோதி 15 மாடுகள் பலிபெரியகுளம் அருகே அரசு பேருந்து

மோதி 15 மாடுகள் பரிதாபமாக பலியாகி உள்ளது.

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி மஞ்ச நாயக்கம் பட்டியை சேர்ந்ததன தன சேகரன் இவர் தொழு நாட்டு மாடுகளை வைத்த தொழில் செய்து வருகிறார் பெரியகுளம் அருகே டி கள்ளிப்பட்டியில் மாட்டு கிடை அமைத்து அங்கு மாடுகளை வைத்து பராமரித்து வருகிறார் .

இந்நிலையில் நேற்று நள்ளிரவு மேய்ச்சலுக்கு சென்று கொண்டிருந்த மாடுகள்தேனிதிண்டுக்கல் பைபாஸ் சாலையில் ரோட்டை கடக்க முயன்ற போது தேனியில் இருந்து திண்டுக்கல் நோக்கி வந்த அரசு பேருந்து மாடுகள் மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே 15 மாடுகள் ரத்த வெள்ளத்தில் பலியாகிவிட்டது அப்பகுதியில் ரோந்து நெடுஞ்சாலை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று போலீஸ் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி உள்ளது இது தொடர்பாக பெரியகுளம் தென்கரை போலீசார் வழக்கு பதிவு செய்துவிசாரணை நடத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு வீடியோ – போட்டோகிராபர்ஸ் அசோசியேசன் நடத்தும் சர்வதேச புகைப்பட தொழில்நுட்ப கண்காட்சி, சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்றது. அப்போது சினிமா ஒளிப்பதிவாளர் மது அம்பாட், கிருஷ்ணகிரி மாவட்ட மூத்த புகைப்பட கலைஞர்கள் ஸ்ரீதர், கோவிந்தராஜ், மகபூப் பாஷா ஆகியோருக்கு "வாழ்நாள் சாதனையாளர்" விருது வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு

**நீலகிரி மாவட்டம், கேத்தி தேர்வு நிலை பேரூராட்சி**

**ந.க.எண். 186 / 2025** | **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** | **நாள்: 14.05.2025**

கேத்தி தேர்வு நிலை பேரூராட்சியில் சிறப்பு நிதி திட்டம் (**Special Fund**) 2025-2026ம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.258.00 இலட்சம் மதிப்பீட்டில் கேத்தி பேரூராட்சி கரிபாலம் முதல் கீழ் ஒடையரட்டி, சாலமூர் சாலை, கேத்தொரை முதல் பொறையரட்டி சாலை, இந்திராநகர் நுந்தளாமட்டம் சாலை, மேல் ஒடையரட்டி சாலை, சோகத்தொரை தார்ச்சாலை மேம்பாடு செய்தல் பணி செய்திட ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in மற்றும் http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களும் பெறலாம்.

2) ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :

| | | |
|---|---|---|
| அ) | முன் கலந்தாய்வு கூட்டம் | 13.06.2025 காலை 11.00 மணி |
| ஆ) | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 16.06.2025 மாலை 3.00 மணி வரை |
| இ) | ஒப்பந்தப்புள்ளி திறத்தல் | 16.06.2025 மாலை 3.30 மணி |

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

செயல் அலுவலர்,
கேத்தி தேர்வு நிலை பேரூராட்சி, நீலகிரி மாவட்டம்.

செ.ம.தொ.இ / 2272 / ஒப்பந்தப்புள்ளி /2025

**TANEJA AEROSPACE AND AVIATION LIMITED**

Regd. Office: Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishnagiri Dist., Belagondapalli - 635114, Tamil Nadu, India Phone : 04347-233508, Fax : 04347-233414, E-mail : secretarial@taal.co.in, Website : www.taal.co.in, CIN : L62200TZ1988PLC014460

**EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE PERIOD ENDED MARCH 31, 2025** (Rs. LAKH)

| Sr. No. | Particulars | Three Months Ended March 31, 2025 (Audited) | Year Ended March 31, 2025 (Audited) | Three Months Ended March 31, 2024 (Audited) |
|---|---|---|---|---|
| 1 | Revenue from Operations | 1,238.07 | 4,061.69 | 818.51 |
| 2 | Profit before exceptional items and tax | 783.25 | 2,343.11 | 365.45 |
| 3 | Profit before tax | 783.25 | 2,343.11 | 365.45 |
| 4 | Profit after tax | 612.25 | 1,807.56 | 252.30 |
| 5 | Total comprehensive income for the period | 634.06 | 1,829.37 | 221.29 |
| 6 | Paid up equity share capital (Face Value Rs. 5 per share) | 1,275.03 | 1,275.03 | 1,275.03 |
| 7 | Reserves excluding revaluation reserves | 12,958.66 | 12,958.66 | 11,766.80 |
| 8 | Earnings / (Loss) per share (of INR 5/- each) (not annualised): | | | |
| | (a) Basic earnings / (loss) per share (INR) | 2.40 | 7.09 | 1.00 |
| | (b) Diluted earnings / (loss) per share (INR) | 2.40 | 7.09 | 1.00 |

**EXTRACT OF THE STATEMENT OF STANDALONE FINANCIAL RESULTS FOR THE PERIOD ENDED MARCH 31, 2025** (Rs. LAKH)

| Particulars | Three Months Ended March 31, 2025 (Audited) | Year Ended March 31, 2025 (Audited) | Three Months Ended March 31, 2024 (Audited) |
|---|---|---|---|
| Revenue from Operations | 1,238.07 | 4,061.69 | 818.51 |
| Profit before exceptional item and tax | 783.31 | 2,343.17 | 365.51 |
| Profit before tax | 783.31 | 2,343.17 | 365.51 |
| Profit after tax | 612.31 | 1,807.62 | 252.36 |
| Total comprehensive income for the period | 634.12 | 1,829.43 | 221.35 |

Notes : 1. The audited consolidated financial result and audited standalone financial results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at its meeting held on 13th May, 2025. The statutory auditors have expressed an unmodified audit opinion on these results. 2. The above is an extract of the detailed format of financial results filed with stock exchange under Regulation 33 of the Securities and Exchange Board of India ( Listing Obligations and Disclosure Requirement) Regulation, 2015. The full format for three months and year ended March 31,2025 are available on the BSE Limited website (URL: www.bseindia.com) and on company's website (www.taal.co.in). The same can be accessed by scanning the QR code provided below.

Place: Bangalore
Date : May 13, 2025

For and on behalf of the Board of Director
Rakesh Duda
Managing Director
DIN: 05234273